


**10. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி 4 ஆயிரத்து 399 நாட்கள் தொடர்ச்சியாக பணியாற்றி இந்திய வரலாற்றில் நீண்டகால சேவையாற்றும் பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

2. பிரதமரை பாராட்டி மத்திய அமைச்சரவை இன்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

3. நித்தி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் திரு.விஜய் இன்று டெல்லி சென்றடைந்தார்.

4. பிரபல திரைப்பட இயக்குநர் பாரதிராஜா உடல்நலக் குறைவால் இன்று காலமானார்

5. ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு பி.வி.சிந்து, மாளவிகா பன்சோத், இஷாராணி, தன்வீ ஷர்மா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

இனிவிரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நம் நாட்டில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, 12 ஆண்டுகள் தொடர்ச்சியாக நீண்டகாலம் பணியாற்றிய பெருமையை பிரதமர் திரு. நரேந்திரமோடி பெற்றுள்ளார்.

2014-ம் ஆண்டு மே 26-ம் தேதி பிரதமராக பொறுப்பேற்று, 4 ஆயிரத்து 399 நாட்கள் தொடர்ச்சியாக பணியாற்றி இந்திய வரலாற்றில் நீண்ட கால சேவையாற்றும் பிரதமர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளாார்.

பிரதமரின் இந்த சாதனைக்கு பி.ஜே.பி. தேசிய தலைவர் திரு. நிதின் நபின் வாழ்த்து தெரிவித்ததோடு, பிரதமரின் சீரிய தலைமையில் 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 12 ஆண்டுகளில் அனைத்து சமூக மக்களும் வளர்ச்சி பெற்றுள்ளதாகவும் புகழாரம் சூட்டினார்.

பிரதமரின் ஆட்சியில் பெண்கள் ஆளுமை பெற்றுள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

மத்திய அமைச்சர்கள் திரு. அமித்ஷா, டாக்டர் எஸ். ஜெய்சங்கர், திரு.பியூஷ்கோயல், திருமதி. நிர்மலா சீதாராமன், திரு. ஷிவ்ராஜ்சிங் சௌஹான் உள்ளிட்ட அமைச்சர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமரின் 12 ஆண்டுகால நிறைவை ஒட்டி புதுதில்லியில் இன்று தேசிய ஜனநாயக கூட்டணியின் சிறப்பு கூட்டம் நடைபெறுகிறது

இந்த கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர்.

பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர்.

தேசிய வளர்ச்சி, கட்டமைப்பு திட்டங்கள், 2027-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த இந்தியாவை முன்னெடுத்து செல்வது ஆகியவை குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப் படவுள்ளது.

நாட்டின் நீண்டகால பிரதமராக தொடர்ச்சியாக சேவையாற்றி வரும் திரு. நரேந்திரமோடியை பாராட்டும் வகையில் மத்திய அமைச்சரவை இன்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அமைச்சரவை கூட்டத்திற்கு வந்த பிரதமரை பாராட்டும் வகையில் அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

தொழில்துறை தலைவர்களும், பிரதமருக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீர்த்திருத்தங்கள், இலகுவான வர்த்தகம், கட்டமைப்பு முதலீடுகள், வர்த்தகத்தை விரிவுப்படுத்தியது, நிதி கட்டமைப்பை வலுப்படுத்தியது, உலகளாவிய உற்பத்தி சூழலுக்கு வளர்ச்சிப்பெற்றது போன்றவற்றால் நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டுள்ளதாக தொழில்துறையினர் புகழாரம் சூட்டினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், பல்கேரியா மற்றும் ஃபின்லாந்து நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக இன்று செல்கிறார்.

இவ்விரு நாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சர்களை சந்திக்கும் அவர், இருதரப்பு உறவுகள், வர்த்தகம், பொருளாதாரம் உள்ளிட்டவைகளில் அடுத்தக்கட்ட முன்னெடுப்புகள் குறித்து கலந்தாலோசிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பாதுகாப்பு அமைச்சகம்

நாட்டில் பாதுகாப்பு கொள்முதல் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கான சோதனை நடைமுறைகள் குறித்த பயிலரங்கம் நாளை புதுதில்லியில் நடைபெறவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு உற்பத்தியில் தன்னிறைவை வலுப்படுத்தி பாதுகாப்பு படைகளுக்கும் தொழில் துறையினருக்கும் இடையே சிறந்த ஒத்துழைப்பை மேம்படுத்த இப்பயிலரங்கம் வகை செய்யும் என அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் நாளை நடைபெறவுள்ள நித்தி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் திரு. விஜய் இன்று புதுதில்லி சென்றடைந்தார்.

இப்பயணத்தின் போது குடியரசு தலைவர், குடியரசு துணை தலைவர், மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோரையும் அவர் சந்தித்து பேசவுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி. சோனியா காந்தியையும் அவர் சந்தித்து பேசுவார் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பாரதிராஜா

பிரபல திரைப்பட இயக்குநரும், நடிகருமான பாரதிராஜா உடல்நலக்குறைவால் இன்று காலமானார்.

அன்னாருக்கு வயது 84.

1977-ம் ஆண்டு, 16 வயதினிலே படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார்.

கிழக்கே போகும் ரயில், சிகப்பு ரோஜாக்கள், நிழல்கள், அலைகள் ஓய்வதில்லை, மண்வாசனை, முதல் மரியாதை, வேதம் புதிது, கருத்தம்மா, கிழக்கு சீமையிலே, ஒரு கைதியின் டைரி உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட திரைப்படங்களையும் அவர் இயக்கியுள்ளார்.

திரைப்படங்களை படப்பிடிப்பு தளங்களிலிருந்து இயற்கை எழில்கொஞ்சும் கிராம சூழலுக்கு எடுத்துச்சென்ற பாரதிராஜா என் இனிய தமிழ் மக்களே! என்ற கம்பீரமான குரலில்

திரைப்படங்களில் முகவுரை வழங்கி மக்களின் மனதில் நீக்கமற நிறைந்துள்ளார்.

.. வாய்ஸ் ..

கருத்தாழம் மிக்க பாடல்கள் அவருடைய திரைப்படத்தின் சிறப்பம்சமாகும்.

.. பாடல் ..

2004-ம் ஆண்டு நாட்டின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது அவருக்கு வழங்கப்பட்டது.

தேசிய திரைப்படம்,

தென்னிந்திய Film Fare,

மாநில திரைப்பட விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

சென்னை நீலாங்கரை இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு முதலமைச்சர் திரு விஜய் இன்று நேரில் அஞ்சலி செலுத்தினார்.

முதலமைச்சர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் பல தலைமுறை கலைஞர்களை உருவாக்கிய பாரதிராஜாவின் பங்களிப்பு தமிழ் திரைப்பட வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், திரைப்பட நடிகர்கள் ரஜினிகாந்த், கமலஹாசன் உட்பட பல்வேறு திரைத்துறையினர் பாரதிராஜாவிற்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரது இறுதிச்சடங்கு நாளை தேனியில் முழு அரசு மரியாதையுடன் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மதன் ராஜா

தமிழ்நாட்டில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையில் அரசு திட்டங்களின் முன்னெடுப்பு பணிகள் குறித்து இத்துறைக்கான அமைச்சர் திரு. மதன் ராஜா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை கிண்டி சிட்கோ அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களுடன் துறை சார்ந்த அரசு திட்டங்கள் குறித்தும் ஒவ்வொரு திட்டத்திற்கான இலக்கினை அடைவது குறித்தும் கேட்டறிந்தார்.

கடந்த ஆண்டை விட அதிக அளவில் பயனாளிகளை கண்டறிந்து தொழில்முனைவோர்களை உருவாக்க வேண்டும் என்ற அறிவுறுத்திய அவர், அந்தந்த மாவட்டங்களில் அது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட அனைத்து நிறுவனங்களும் உற்பத்தியை தொடங்கிட வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்குமார்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 3 உதவி இயக்குநர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை மாநில வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ராஜ்குமார் இன்று வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து சென்னையில் நகர ஊரமைப்பு ஆணையரகம் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் துறை கட்டமைப்பு, வளர்ச்சித்திட்டங்கள், ஒற்றை சாளர இணையவசதி, அங்கீகரிக்கப்படாத மனை பிரிவுகள், அனுமதியற்ற கல்வி நிறுவன கட்டடங்கள் வரண்முறை படுத்துதல் உள்ளிட்டவை குறித்து அமைச்சர் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தர்மபுரி

அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சரவணன் அறிவுறுத்தியுள்ளார்.

தர்மபுரி மாவட்டம் பஞ்சப்பள்ளியில் இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பங்கேற்ற அவர், மனுக்கள் ஏற்கும் நிலையை உருவாக்க வேண்டுமென்றார்.

... வாய்ஸ் ...

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

அரியலூர் மாவட்டம் வாலாஜா நகரம் ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை பணிகளின் தரம் குறித்து ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி இன்று நேரில் ஆய்வு செய்தார்.

மத்திய அரசு பணியாளர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பட்டதாரி நிலைத் தேர்விற்கு இலவச பயிற்சி வகுப்புகள் அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வரும் 17-ம் தேதி முதல் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

சிட்னியில் நடைபெறும் ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய

சுற்றுக்கு இந்தியாவின் துருவ் ராவத், மனிஷா இணை முன்னேறியது.

இன்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்த இணை ஆஸ்திரேலிய இணையை 21-13, 21-14 என்ற செட்களில் வென்றது.

மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் பி.வி.சிந்து, மாளவிகா பன்சோத், இஷாராணி, தன்வீஷர்மா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖